**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 513/2004**
**U/s. 406,420 IPC**
**PROSECUTION WITNESS NO. 56 (LW. 18)**

| | | |
|---|---|---|
| **Name** | : சுசிலா | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | : | **Age : /2026** |

**4** வது எதிரி இறந்துவிட்டார் **.1-3,5** எதிரிகள் ஆஜர் இல்லை**. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு.கார்த்தி, ரெக்கார்ட் கிளார்க், செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 513/2004 01.04.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.55 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் அருளானந்த அம்மாள் நகர் 10 வது குறுக்கு சந்தில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை நான் பார்த்ததில்லை. சம்பவம் நடந்த தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. எனது வீட்டிற்கு அருகில் குடியிருந்த நபர் நித்திலவல்லி என்பவர் என்னிடம் மாதம் ரூ. 150/– வீதம் முன்று நபர்களுக்கு கட்டுவதற்காக நகை சீட்டு கட்டுவதாக கூறி வாங்கி சென்றார். சம்பவம் நடந்து 20 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் எனக்கு எதுவும் ஞாபகமில்லை. அந்தநபர் அந்த இடத்தில் இல்லை என தெரிந்த நபர்கள் மூலம் தெரிந்து கொண்டேன். இவ்வழக்கு சம்மந்தமாக எதுவும் நினைவில்லை. போலீசார் என்னை விசாரித்தாக எனக்கு தற்போது நினைவில்லை.

**<u>1–3, 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இவ்வழக்கு சம்பவம் எதுவும் ஞாபகமில்லை என்றால் சரிதான். போலீசார் தற்போது எதற்காக எனக்கு அழைப்பாணை கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T.**கனிமொழி**., L.L.M.,

நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 513/2004**
**U/s. 406,420 IPC**
**PROSECUTION WITNESS NO. 57 (LW. 11)**

| | | |
|---|---|---|
| **Name** : ரகுநாதன் | | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** : | | **Age : /2026** |

**4** வது எதிரி இறந்துவிட்டார் **.1-3,5** எதிரிகள் ஆஜர் இல்லை**. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு.கார்த்தி, ரெக்கார்ட் கிளார்க், செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 513/2004 01.04.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.05**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ஒரத்தநாடு வடக்குர் தெற்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். CRC யில் ஓட்டுநராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் 1999 ல் தஞ்சாவூர் கணபதி தங்க நகை மாளிகையில் மாதம் ரூ. 150/– வீதம் இரண்டு சேமிப்பு சீட்டு கட்டி வந்தேன். நான் 24 மாதம் சீட்டு கட்டினேன். பணம் ரூ.1000/– கட்டியிருந்தேன். எனது சேமிப்பு சீட்டு முடிந்த உடன் நான் அதற்கான 3 பவுன் நகை வாங்குவது குறித்து கேட்டபோது , அவர்கள் எனது ரூ. 1000/– பணத்தை வாங்கி கொண்டு அடுத்த வாரம் வர சொன்னார்கள். நான் நகை வாங்கு வதற்காக அந்த கடைக்கு சென்றபோது அந்த கடை பூட்டபட்டிருந்தது. அருகில் உள்ள கடைகளில் விசாரித்தபோது அவர்கள் அந்த நகை கடை உரிமையாளர் கடையை பூட்டி விட்டு ஓடிவிட்டதாக கூறினார்கள். நான் அது குறித்து விசாரித்து விட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அவர்கள் நகை சீட்டு போன்ற ஆவணங்களை என்னிடம் கேட்டார்கள். நானும் அவர்களிடம் ஒப்படைத்தேன். நான் எனது நண்பர்களிடம் இது குறித்து விசாரித்தபோது வழக்குமுடிந்ததால் தான் பணம் கிடைக்கும் என்று சொன்னார்கள். என்னை போல் பல பேர் ஏமாற்றபட்டுள்ளார்கள். என்னுடன் சேர்த்து என்னுடன் வேலை பார்த்த தமிழ்செல்வன்( ஓட்டுநர்), முருகையன் (நடத்துநர்) ஆகிய இரண்டு நபர்கள் சீட்டில் சேர்த்துவிட்டேன். எனது அம்மா அஞ்சலை 18 மாதம் சீட்டு கட்டியுள்ளார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1–3,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலீசார் என்னை விசாரித்தபோது நான் நகை வாங்கு வதற்காக அந்த கடைக்கு சென்றபோது அந்த கடை பூட்டபட்டிருந்தது என்றும் அருகில் உள்ள கடைகளில் விசாரித்தபோது அவர்கள் அந்த நகை கடை உரிமையாளர் கடையை பூட்டி விட்டு ஓடிவிட்டதாக கூறினார்கள்என்றும் நான் அது குறித்து விசாரித்து

விட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும் அவர்கள் நகை சீட்டு போன்ற ஆவணங்களை என்னிடம் கேட்டார்கள் என்றும் நானும் அவர்களிடம் ஒப்படைத்தேன் என்றும் நான் எனது நண்பர்களிடம் இது குறித்து விசாரித்தபோது வழக்குமுடிந்ததால் தான் பணம் கிடைக்கும் என்று சொன்னார்கள் என்றும் என்னை போல் பல பேர் ஏமாற்றபட்டுள்ளார்கள் என்றும் என்னுடன் சேர்த்து என்னுடன் வேலை பார்த்த தமிழ்செல்வன்( ஓட்டுநர்), முருகையன் (நடத்துநர்) ஆகிய இரண்டு நபர்கள் சீட்டில் சேர்த்துவிட்டேன் என்றும் எனது அம்மா அஞ்சலை 18 மாதம் சீட்டு கட்டியுள்ளார் என்றும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு நான் 1999 ல் தஞ்சாவூர் கணபதி தங்க நகை மாளிகையில் மாதம் ரூ. 150/- வீதம் இரண்டு சேமிப்பு சீட்டு கட்டி வரவில்லை என்றாலும், நான் 24 மாதம் சீட்டு கட்டவில்லை என்றாலும், பணம் ரூ.1000/- கட்டவில்லை என்றாலும், எனது சேமிப்பு சீட்டு முடிந்த உடன் நான் அதற்கான 3 பவுன் நகை வாங்குவது குறித்து கேட்டதாகவும் , அவர்கள் எனது ரூ. 1000/- பணத்தை வாங்கி கொண்டு அடுத்த வாரம் வர சொன்னதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. போலீசார் சொல்லி கொடுத்தன் பேரில் நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல. நான் போலீசாரிடம் எவ்வித ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T.**கனிமொழி**., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.